அலகு 8

# அரசியல் கொள்கைகள் – பகுதி I



## கற்றலின் நோக்கங்கள்

- எதிர்மறைத் தாராளவாதம், நேர்மறைத் தாராளவாதம் மற்றும் புதியத் தாராளவாதம் ஆகியவற்றின் பொருள் மற்றும் தன்மைகளை புரிந்து கொள்ளுதல்.
- தாராளவாதத்தின் சிந்தனையாளர்களையும் தலைவர்களையும் அடையாளம் காணுதல்.
- காரல் மார்க்சின் காலத்திற்கு பின் வந்த பொதுவுடைமைவாதம் சிந்தனையாளர்களை, கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்.
- சமதர்ம கொள்கையில் பல விதமான உட்பிரிவுகளின் சாரத்தை அறிந்து சமதர்மவாதத்தை பொதுவுடைமைவாதத்துடன் ஒப்பிடுதல்.
- தேசியத்தின் பொருள், தோற்றம், கோட்பாடுகள், உள்நாட்டு, வெளிநாட்டு சவால்கள் ஆகியவற்றைக் காண்பது.
- இந்திய தேசியத்தின் உருவாக்கக் காரணிகளை ஆய்வு செய்தல்.
- பாசிசத்தின் தோற்றம், பொருள் மற்றும் அடிப்படைத் தன்மைகளைப் பற்றி அறிதல்.

## 8.1 தாராளவாதம்

நவீன அரசியல் கோட்பாட்டின் மிக முக்கிய கொள்கையாக உள்ளது. இது 17–ஆம் நூற்றாண்டில் தோன்றியது. சம கால உலகில் பெருமளவில் உலக நாடுகளால் தாராளவாதம் பின்பற்றப்படுகிறது. இலத்தீன் மொழியில் "Liber" என்றால் விடுதலை என்று பொருளாகும். தாராளவாதத்தின் ஆங்கிலச் சொல்லான "Liberlism" இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து தோன்றியது. 19–ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் அரசியல் அமைப்பை ஆதரித்தவர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தினார்கள். மேற்கத்திய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் தாராளவாதத்தை அரசியலிலும், பொருளாதாரத்திலும் பின்பற்றுகின்றன.

PGBU8

தாராளவாதம் வரலாற்றில் மூன்று வகைகளாகப் காணப்படுகின்றது. முதலாவதாக 1930–ஆம் ஆண்டு வரையில் இது 'எதிர்மறைத் தாராளவாதம்' என அழைக்கப்பட்டது. இரண்டாவதாக, உலகப் பொருளாதார மந்த நிலைக்குப் பின் 'நேர்மறைத் தாராளவாதம்' என அழைக்கப்பட்டது. மூன்றாவதாக, 1970–களுக்குப் பின்னர் இது 'சமகாலத் தாராளக் கொள்கை' என அழைக்கப்படுகிறது.

### அ) எதிர்மறைத் தாராளவாதம்

எதிர்மறைத் தாராளவாதம் பாரம்பரிய தாராளவாதம், *Laissez Faire* (பிரெஞ்சு மொழியில்) என்றும் அழைக்கப்படுகிறது. ஜான் லாக் என்ற அரசியல் சிந்தனையாளர் 'சிவில் அரசாங்கத்தின் இரண்டு ஒப்பந்தங்கள்' (*Two Treaties of Civil Government*) என்ற தனது நூலில் எதிர்மறைத் தாராளவாதத்தை எடுத்துரைத்தார்.




ஜான் லாக், பாரம்பரியத் தாராளவாதத்தின் தந்தை. உயிர், விடுதலை, தனிச் சொத்துகள் சமஉரிமை.